

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.06.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி–I க்கான பணிகளில் 21 துணை ஆட்சியர்கள், 26 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 25 உதவி ஆணையர்கள் (வணிக வரிகள்), 13 கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர்கள், 7 உதவி இயக்குநர்கள் (ஊரக வளர்ச்சி) மற்றும் 3 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள், என மொத்தம் 95 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 14 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் க.நந்தகுமார் ஆகியோர் உள்ளனர்.

### சமூக நீதி பயணத்தின் வெற்றியில் என்றும் வாழ்வார்

# ஒட்டுமொத்த இந்தியாவுக்குமான தலைவர் வி.பி.சிங்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஜூன் 26 - முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் பிறந்த நாளையொட்டி, ஒட்டுமொத்த இந்தியாவுக்குமான தலைவர் அவர் என்றும் - சமூக நீதிக் காவலர் என்றும் புகழாரம் சூட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

மேனாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் 94வது பிறந்தநாளையொட்டி நேற்று (25.6.2024) சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் நிறுவப்பட்ட அவரது முழு திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு: -

உத்தரப்பிரதேசத்தில் பிறந்திருந்தாலும் ஒட்டுமொத்த இந்தியாவுக்குமான தலைவர் 'சமூகநீதிக் காவலர்' வி.பி.சிங் அவர்கள்!

சமூகநீதி பயணத்தின் வெற்றியில் அவர் என்றும் வாழ்வார்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி – சோமாஸ்பாடி கிராமத்தில் உள்ள

# மாரியம்மன் கோயிலை புதுப்பிக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கோரிக்கை !

சென்னை, ஜூன் 26–

கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, சோமாஸ்பாடி கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோயிலை புதுப்பிக்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கோரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :–

**கு.பிச்சாண்டி:** என்னுடைய கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, சோமாஸ்பாடி கிராமத்தில் இருக்கின்ற மாரியம்மன் கோயிலை புதுப்பிக்க வேண்டும் என்ற அங்குள்ள மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையிலேயே அதுகுறித்து அறிவிப்பு வெளியிடுவார்களா?

மேலும், அருள்மிகு நெல்லையப்பர் கோயிலில் தேரை வடம் பிடித்து இழுத்தபோது, கயிறு சரியில்லாமல் இருந்தது என்று அங்குள்ள பத்திரிகை மற்றும் தொலைக்காட்சியில் செய்திகள் வந்தன. ஆனால், அதற்கு இரும்புச் சக்கரம் மாற்றப்பட்டிருக்கிறது. அங்கு இரும்பு சக்கரம் மாற்றியது போன்று, திருவண்ணாமலை கோயிலில் இரும்புச் சங்கிலி இருப்பதைப் போன்று, அனைத்துத் திருக்கோயில் களின் தேரோட்டங்களிலும் இரும்புச் சங்கிலிகளைப் போட்டு தேரை இழுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



**பி.கே.சேகர்பாபு:** ஆசியாவிலே இருக்கின்ற மிகப்பெரிய தேர்களில் மூன்றாவது தேர் அத்தேராகும். 28x28 என அகலம், நீளம் மற்றும் 80 அடி உயரம் கொண்டது அந்தத் தேர். கடந்த 9 நாள் உற்சவத்தின் இறுதி நாளான நேற்று தேரை வடம் பிடித்து இழுக்கின்ற நிகழ்ச்சி நடைபெற்றது. தேரின் வடத்தை பின்னால் இருந்து நெம்புகோல் தருவதற்கு முன்பாக பக்தர்கள் பக்திப் பரவசத்தோடு ஒட்டுமொத்தமாக இழுத்ததன் காரணமாக அந்தத் தேரின் வடம் அறுந்தது. அதற்கு மாற்றாக திருச்செந்தூர் தேர் வடம் தயாராக வைக்கப்பட்டிருந்தது. அந்தத் தேர் வடத்தை உடனடியாக இணைத்து, நேற்று இரவு 9.30 மணியளவில் 5 சுவாமி களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, வெற்றிகரமாக தேர் நிலையை அடைந்தது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எல்லா தேர்களுக்கும் தேரினுடைய இணைப்புப் பகுதியில் இரும்புச் சங்கிலி இருக்கும். பக்தர்கள் நீளமாக வடம் பிடிக்க வேண்டியிருக்கிறது. இந்த நெல்லையப்பர் தேர் என்பது 450 டன் எடை கொண்ட தேராகும்.

அந்தத் தேரை இழுப்பதற்கு வடம் எப்பொழுதும் கயறினால் தான் நீளமாக இழுத்துச் செல்ல முடியும் என்ற காரணத்தினால் தான் அனைத்து திருத்தேர்களிலும் வடம் அதிக எடைக் கொண்ட தேருக்கு கயற்றினால்தான் பின்னப்படுகிறது. நேற்று நடைபெற்ற அந்த உற்சவத்தில், நம்முடைய தீயணைப்புத் துறை, பொதுப் பணித் துறை வடத்திற்கும், தேருக்கும் சான்றிதழ் அளித்த நிலையில் தான், அந்தத் தேர் வீதி உலாவிற்கு எடுத்து வரப்பட்டது. அவர் கோரியபடி எந்தெந்தத் திருத்தேர்களுக்கெல்லாம் சங்கிலிகள் தேவையோ, அவற்றிற்கு பொருத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் கூறிய திருக்கோயில் இந்த ஆண்டு திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 8,624 திருக்கோயில்களுக்கு மண்டல குழு, மாநில குழு, தொல்லியல் குழு அனுமதி பெற்று அதிகளவில் ஆயிரக்கணக்கான திருக்கோயில்களுக்கு அனுமதியளித்த ஆட்சி, தமிழ்நாடு முதல்வர் தலைமையில் இருக்கின்ற இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் கோரிய அந்தத் திருப்பணியும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல், நேற்றையதினம் ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சி. ஏற்கெனவே 150 ஆண்டுகள் கடந்த சீத்தனாஞ்சேரி திருக்கோயிலினுடைய திருத்தேர் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் தேர் வீதி உலா நடத்தப்பட்டது. விழுப்புரத்திலே அதேபோல், 100 ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட்டில் இல்லாமல் இருந்த திருத்தேர் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. நேற்றைய ஒரு மகிழ்ச்சி, அன்றைக்கு ஓடாத திருத்தேரை, திருவாரூர் ஆழித் தேரை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தேரை ஓட்டி புகழ்ப் பெற்றார்.

இன்றைக்கு ஓடாமல் இருந்த கண்டதேவி தேர், பல்வேறு இன மக்கள் ஒன்று திரட்டி ஒரு சேர அவர்களை ஒற்றுமைப்படுத்தி திராவிட மாடல் ஆட்சியின் முத்தாய்ப்பாக நேற்றைக்கு கண்டதேவி திருத்தேரை 18 ஆண்டுகளுக்குப் பிறகு ஓட்டிய பெருமை முதல்வர் அவர்களையே சாரும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் உறுப்பினர் தேர் சம்பந்தப்பட்ட கேள்வி என்பதால், இதனையும் தெரிவித்து, பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



நேற்று (25.06.2024) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி–1இல் தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 13 துணைப்பதிவாளர் பணியிடங்களுக்கு பணிநியமன ஆணைகளை பெற்றவர்கள், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்களை தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வின்போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர் கே.கோபால், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர் ந.சுப்பையன் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.06.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி–I க்கான பணிகளில் 21 துணை ஆட்சியர்கள், 26 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 25 உதவி ஆணையர்கள் (வணிக வரிகள்), 13 கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர்கள், 7 உதவி இயக்குநர்கள் (ஊரக வளர்ச்சி) மற்றும் 3 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள், என மொத்தம் 95 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 14 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் க.நந்தகுமார் ஆகியோர் உள்ளனர்.

### நெல்லை மார்க்சிஸ்ட் அலுவலகம் மீது தாக்குதல் : வேகமான நடவடிக்கை மூலம்

# குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவர்!

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்!

**சென்னை, ஜூன் 26- நெல்லை மார்க்சிஸ்ட் அலுவலகம் தாக்கப்பட்டது குறித்து பேரவையில் கவனஈர்ப்புத் தீர்மானத்துக்கு பதிலளித்துப் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தற்போதுள்ள சம்பவங்களின் அடிப்படையில் வேகமான நட வடிக்கை மூலம் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக் கப்படுவார்கள்; அதுவே சரியானதும் ஆகும் என்று குறிப்பிட்டார்.**

பேரவையில், திருநெல்வேலி மாவட்டம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது குறித்த கவன ஈர்ப்புக்கு பதிலளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

திருநெல்வேலி மாவட்டத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது தொடர்பாக இங்கே உறுப்பினர்கள் வி.பி.நாகைமாலி, திருமதி. வானதி சீனிவாசன், தி.வேல்முருகன், எம்.எச். ஜவாஹிருல்லா, சதன் திருமலைக்குமார் ம.சிந்தனை செல்வன், டீ, இராமச்சந்திரன், செ. ராஜேஷ்குமார் ஆகியோர் தங்களது கருத்துகளை எடுத்துரைத்திருக்கிறார்கள். அது தொடர்பாக இந்த அவைக்கு சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் சம்பவத்தில், திருநெல்வேலி மாவட்டம், ரெட்டியார்பட்டியில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் 13.6.2024 அன்று இருவேறு சமூகத்தைச் சார்ந்த மணமக்களுக்கு சாதி மறுப்புத் திருமணம் செய்து வைக்கப்பட்டு, அதுதொடர்பான புகைப்படம் முகநூல் பக்கத்திலே பதிவிடப்பட்டதாகத் தெரிகிறது.

இதனையடுத்து, மணப்பெண்ணின் குடும்பத்தினர் கடந்த 14.6.2024 அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்குச் சென்று, இதுகுறித்துக் கேட்டு, தகராறில் ஈடுபட்டு, அங்கிருந்த பொருட்களைச் சேதப்படுத்தியிருக்கிறார்கள்.

**வன்கொடுமைக்கான முகாந்திரம்!**

இச்சம்பவம் தொடர்பாக, அக்கட்சியின் சார்பில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், பெருமாள்புரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, 14 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களில் 7 பெண்கள் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்; 7 ஆண்கள் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டி ருக்கிறார்கள். விசாரணையில் இச்சம்பவத்தில் சாதிய வன்கொடுமை நிகழ்ந்திருப்ப தற்கான முகாந்திரம் உள்ளதாகச் தெரியவந்ததையடுத்து, இவ்வழக்கில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகளும் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சமூகநீதிக் கொள்கையை தனது உயிர் மூச்சாகக் கொண்டு தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், பெண் கல்வி, சமஉரிமை, சாதி மறுப்புத் திருமணம் ஆகியவற்றை தனது ஆரம்பகாலம் தொட்டே ஆதரித்து வரக் கூடிய இயக்கமாகும். இதனை இந்த அவையில் உள்ள அனைவரும் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நமது திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுபோன்ற பிற்போக்குத்தனமான சமூகக் குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மிகவும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக, இதுபோன்ற இனங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகளில் குற்றவாளிகளுக்கு முறையான தண்டனை வாங்கித் தரப்படுகிறது.

**வேகமான நடவடிக்கை மூலம் விரைந்து நடவடிக்கை!**

உறுப்பினர்கள் குறிப்பிட்டபடி இதற்கென ஒரு சிறப்புச் சட்டத்தைக் கொண்டுவருவதைவிட, தற்போது இதுபோன்ற குற்றங்களுக்கு நடைமுறையிலுள்ள சட்டப்பிரிவுகள், குறிப்பாக வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில், தீவிரமான, வேகமான நடவடிக்கை எடுத்து குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது சரியானது என்று இந்த அரசு கருதுகிறது. அந்த வகையில் சமீபத்தில் பல வழக்குகளில், அதிலும் கடந்த ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற குற்றங்களில்கூட விசாரணை துரிதப்படுத்தப்பட்டு, குற்றவாளிகளுக்கு தண்டனைகள் வாங்கித் தரப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் காவல் சரகம், புதுக்கூரைப்பேட்டையில் 8.7.2003 அன்று நடைபெற்ற இரட்டை கொலை வழக்கில் கடந்த 29.2.2024 அன்று குற்றவாளிகளுக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அதேபோல, 2015 ஆம் ஆண்டில், நாமக்கல் மாவட்டத்தில் கோகுல்ராஜ் என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கு முறையாக கண்காணிக்கப்பட்டு, வேகப்படுத்தப்பட்டு, இம்மாதம் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில், மதுரை மாவட்ட வன்கொடுமை சிறப்பு நீதிமன்றம் 8.3.2022 அன்று வழங்கிய தீர்ப்பு, மாண்பமை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையால் உறுதிசெய்யப்பட்டது.

அதேபோல, கடலூர் மாவட்டத்தில் ஆதிவராகநத்தத்தைச் சேர்ந்த சீதா என்பவர் 15.6.2014 அன்று கொலை செய்யப்பட்டதையடுத்து, தொடர்புடைய குற்றவாளிகள் 16.7.2014 அன்று கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த வழக்கின் விசாரணையை, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப்பிறகு வேகப்படுத்தி 29.2.2024 அன்று குற்றவாளிகளுக்கு இரட்டை ஆயுள் தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது.

**குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை**

எனவேதான், நான் முன்பு தெரிவித்தபடி, இதுபோன்ற குற்றங்களில் வழக்குகளை முறையாக நடத்தி, குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்தி தண்டனைப் பெற்றுத்தருவது என்பது, புதிய சட்டங்களை இயற்றுவதைவிட சரியானதாக இருக்கும் என்று இந்த அரசு கருதுகிறது.

இந்தக் குற்றங்களை வெறும் குற்றவியல் நிகழ்வாக மட்டும் பார்க்காமல், இதன் சமூகப் பொருளாதார பின்னணிக் காரணிகளை வைத்து அவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது, குற்றவாளிகளுக்கு தண்டனையைப் பெற்றுத் தருவது ஒருபுறம் இருந்தாலும், சமுதாயத்தில் பொருளாதார வளர்ச்சியின் மூலமாக பெண் கல்வி உயரும்போதும், கல்வி பொருளாதாரம், வேலைவாய்ப்பில் ஒரு வளர்ச்சி பெற்ற சமுதாயமாக உயரும்போதும் இதுபோன்ற குற்றங்களின் எண்ணிக்கை வெகுவாக குறையும்.

அதுபோன்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதிலும் நாம் கவனம் செலுத்தி வருகிறோம், அதன் காரணமாகவே, நாம் நடைமுறைப்படுத்தும் புதிய திட்டங்களில் எல்லாம் பெண்களின் வாழ்க்கையை, வாழ்வாதாரத்தை, கல்வியை, அவர்களது உரிமைகளை மேம்படுத்தும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து வருகின்றோம்.

**சமூகத்தில் மனமாற்றம்!**

எடுத்துக்காட்டாக, புதுமைப் பெண் திட்டம், பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை, மகளிருக்கு இலவச பேருந்துப் பயணம், உள்ளாட்சி அமைப்புகளில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு என்று சொல்லிக்கொண்டே போகலாம். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றையெல்லாம் நாம் தொடர்ந்து கொண்டுசெல்லும்போது சமூகத்தில் மனமாற்றம் ஏற்படும். புதிய புதிய சட்டங்களுக்கான தேவையும் குறையும். அதை நோக்கித்தான் இந்த அரசு பயணிக்கிறது.

இருப்பினும், தற்போது நமது இலக்கு சற்று தொலைவில் இருப்பதாகத் தோன்றினாலும், நடைமுறையில் இன்று சந்தித்து வரும் சமூகநீதியிலான பிரச்சினைகளை, அதன் விளைவுகளை இங்கே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல உடனடியாக எதிர்கொள்ளவும், அதற்கொரு தனி முக்கியத்துவம் அளிக்கும் விதமாகவும், சாதி மறுப்புத் திருமணம் தொடர்பான அனைத்து வகை குற்றங்களிலும் வழக்குகளை விரைந்து நடத்திட, அரசுத் தரப்பில் பிரத்யேகமாக சிறப்பு குற்றவியல் வழக்கறிஞர்கள் (Special Public Prosecutors) நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தற்போது இதுபோன்ற குற்றங்களில் எல்லாம், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி காவல் ஆய்வாளர் விசாரணை அலுவலராக நியமிக்கப்படுகிறார். ஆனால், இவ்வழக்குகளில் விசாரணையின் தன்மையை மேலும் தீவிரப்படுத்தும் வகையிலும், வேகப்படுத்தும் நோக்கிலும் விசாரணை அலுவலராக காவல் துணைக் கண்காணிப்பாளரை நியமிப்பது குறித்து சட்ட ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டதைப்போல, இக்குற்றங்களைக் குறைக்கும் வகையில் மாவட்ட அளவிலான குழுக்கள், அவை அமைக்கப்பட்டதன் பின்னணி மற்றும் அவற்றின் செயல்பாடுகள் எவ்வாறு இருந்தன என்பதைப் பற்றியெல்லாம் மீண்டும் ஆய்வு செய்து, அதுகுறித்தும் தேவையான முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவித்து அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.